**ஹம்பந்தோட்டை பிரதேச சபை - 2023**
---------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகள் தொடர்பாக தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து பெற வேண்டிய கூட்டுப் பெறுமதி தொகை ரூபா 25,720,955 தொகைக்கான ஒரு சதவீத வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் சபைக்கு செலுத்தாமையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 நிதிக் கூற்றுக்களின் மூலம் குறிப்பொன்றாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பொன்றாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மயுரபுர வாராந்த சந்தையில் வர்த்தக குடில்களுடனான புதிய கட்டிடம் நிர்மாணிக்கும் செலவாகிய ரூபா 9,144,138 தொகை காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | 2024 நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மூலதனச் செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | அருவச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய 04 முகாமைத்துவ தகவல் முறைமைகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 720,000 தொகை இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அருவச் சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்த முடியாத ரூபா 642,301 இற்கான மீண்டுவரும் தன்மையை உடைய செலவுகள் காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | கூட்டுப்பெறுமதி ரூபா 547,000 தொகைக்கான மூலதனச் செலவுகள் வருவாய்ச் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | கடந்த ஆண்டுகளின் போது மின்சார சபையுடன் உடன்படிக்கைகள் மேற்கொண்டிருக்காமையால் மீளளிப்பு செய்யப்படாத வீதி விளக்கு பராமரிப்புக் கட்டணம் ரூபா 403,416 தொகை பெற வேண்டிய வருமானம் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2024 நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உடன்படிக்கை மேற்கொண்டிருக்காத வருமானங்கள் பெற வேண்டிய மீதி என கணக்கீடு செய்யக் கூடாது. |
| (எ) | நேர் உழைப்பு அடிப்படையில் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த 03 நிர்மாண வேலைகளின் நிர்மாணவேலை அலுவல்கள் வருட இறுதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 354,534 தொகை காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | 2024 நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் சொத்துக்கள் என மூலதனப்படுத்த வேண்டும். |
| (ஏ) | குறைவாக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த நிரந்தர பதவியணியினரின் சம்பளச் செலவு ரூபா 66,948 தொகை பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய மீதிகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள காணி கட்டிட விடயங்கள் தொடர்பான மீதி மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 43,851,826 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை ஆக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்கினை சரி செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கூட்டுத்தொகை ரூபா 21,131,887 தொகைக்கான 08 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | ஆவணங்கள், கோவைகள், மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் சமர்ப்பிக்க முடியாது என மற்றும் சில மீதிகள் இனங்காண முடியாத நீண்டகாலம் முதல் காணப்படக் கூடிய மீதிகள் என. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்ளுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் பெறுமதி மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 | வீதவரி ஆதனங்கள் 5 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் 2010 மற்றும் 2011 ஆண்டுகளின் பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் அறவிடப்பட்டமையால் பெறுமதி மதிப்பீடு காலரீதியாக செயற்படுத்தப்படாத காலம் முறையே 8 வருடங்கள் மற்றும் 7 வருடங்களாக காணப்பட்டது. | பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்வதற்காக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| i. நிதிப் பிரமாணம் 371 | முற்பணங்கள் குறிப்பிட்ட கருமம் முடிவடைந்த உடனே தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 179,299 தொகைக்கான முற்பண மீதி தொடர்பாக அதன்படி நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இந்த மீதியில் 2010, 2011 மற்றும் 2012 ஆண்டுகளுக்குரிய இனங்காணப்படாத ரூபா 116,049 இற்கான மீதியொன்றும் அடங்கியிருந்தது. | இனங்காண முடியாத மீதியொன்றென. | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்க இணங்க செயற்பட வேண்டும். |
| ii. நிதிப் பிரமாணம் 571(3) | வைப்பு மீதியில் மற்றும் கடன்கொடுத்தோர் மீதியில் காணப்படும் 2 வருடங்களை மிகைத்துள்ள முன்கொண்டு வரும் | செலவுக் கடன்கொடுத்தோர் மீதி மற்றும் பொது வழங்கள் கடன்கொடுத்தோர் மீதி | குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்க இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 1,304,791 தொகைக்கான கணக்கு மீதிகள் தொடர்பாக கண்டறிந்து குறிப்பிட்ட பிரிவிற்கு செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானத்திற்கு எடுப்பதற்கு முடியாது எனவும் ஏனைய வைப்புக்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (இ) | 2019 ஜூன் 27 திகதிய திறைசேரி பிரதிச் செயலாளரின் இலக்கம் 05/2019 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 03 | இறந்த மற்றும் ஓய்வுபெற்ற ஊழியர்கள் மூன்றுபேரிடம் பெற வேண்டிய ரூபா 230,955 இற்கான இடர்கடனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 19,000 தொகையொன்று அறவிடப்பட்டுள்ளதுடன் மீதியாகிய ரூபா 211,955 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 5,375,211 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 584,183 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 683,606 | 764,606 | 819,264 | 877,784 | 4,179,120 | 4,280,694 | 4,954,562 | 932,442 |
| வாடகை | 24,016,200 | 24,072,754 | 23,975,892 | 109,360 | 16,185,136 | 18,624,506 | 18,758,015 | 12,498 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 12,143,291 | 2,053,703 | 2,230,903 | 65,000 | 10,957,042 | 2,028,652 | 2,633,482 | 242,200 |
| ஏனைய வருமானங்கள் | 10,527,970 | 10,323,856 | 10,995,178 | 834,444 | 5,353,800 | 5,087,457 | 4,329,770 | 1,505,766 |
| மொத்தம் | 47,371,067 | 37,214,919 | 38,021,237 | 1,886,588 | 36,675,098 | 30,021,309 | 30,675,829 | 2,692,906 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய வீதவரி ரூபா 840,984 தொகையினை அறவீடு செய்வதற்கு மற்றும் 2023 ஆண்டில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என வெளியிடப்பட்டிருந்த 05 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வீதவரியை அறவீடு செய்யும் எல்லையை திருத்துவதற்கு முறையே பிரதேச சபை சட்டத்தின் 158(1) மற்றும் 134(1) பிரிவுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீதவரி ரூபா 68,068 அறவிடப்பட்டுள்ளதுடன் ரூபா 105,768 தொகை பதிவழிப்பதற்கு ஆளுனரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படும் எனவும் மற்றும் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் புதிய வீதவரி திருத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை எனவும். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு மற்றும் வீதவரி எல்லையை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 84,800 தொகை குறைவாக சிட்டையிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் பெற வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 54,000 இனை அறவீடு செய்திருக்கவில்லை. அதே போல் கணிப்பீட்டு அறிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்காத 29 அறிவித்தல் பலகைகளில் இருந்து பெற வேண்டிய கட்டணம் ரூபா 220,200 தொகையும் சிட்டையிடப்பட்டிருக்கவில்லை. | குறைவாக சிட்டையிடல் மற்றும் கணிப்பீட்டு அறிக்கையில் உட்பட்டிருக்காத அறிவித்தல் பலகைக் கட்டணம் 2024 ஆண்டு அறவிடப்படும் எனவும் கிடைக்கப்பெறாத கட்டணத்திற்காக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சபையினால் பொருத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்ற வீதிவிளக்கு எண்ணிக்கையை இனங்காண்பதற்காக கணிப்பீடு மேற்கொண்டு அவை இலக்கமிடப்பட்டு பதிவு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை சபையின் முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் மீளாய்வாண்டின் போது வீதிவிளக்கு பராமரிப்புக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு ரூபா 3,034,816 தொகையாக இருந்தது. | 06 பிரிவுகளில் தொகை மதிப்பீட்டு அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மீதியான 17 பிரிவுகளில் தொகை மதிப்பீட்டு அலுவல்கள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணிப்பீட்டு அலுவல்கள் விரைவாக மேற்கொண்டு அதன் அடிப்படையில் செலவுகள் மேற்கொள்ள வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் அனுபவிக்கின்ற 07 காணிகள், 10 விளையாட்டு மைதானங்கள், 29 மயானங்கள் மற்றும் 10 சனசமூக நிலையங்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட உரித்தாக்கல் அலுவல்கள் விரைவாக மேற்கொள்ளப்படும் என. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்க வேண்டும். |
| (ஆ) | ரூபா 8,483,140 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டு 2021 ஆண்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த உலர்வலய தாவரவியல் பூங்காவின் அண்மையில் வாகனங்கள் நிறுத்தும் செயற்களம் விளைவற்று காணப்படுவதனால் மேற்கொள்ளப்பட்ட செலவு ஆக்கபூர்வமற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதற்காக பாரிய தொகையொன்று செலவிடப்படுவதனால் அதற்காக ஏற்பாடுகள் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | சொத்துக்கள் ஆக்கபூர்வமான பயன்படுத்தக் கூடியவாறு செயற்பட வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4.2(அ) பந்தியின் படி கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கை கூறுவிலை அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுப் பெறுமதி ரூபா 1,312,500 தொகைக்கான 15W LED (Green) 750 மின்குமிழ்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக 03 நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட கூறுவிலை அழைப்புக் கடிதங்களில் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற அலகுகளின் எண்ணிக்கை மற்றும் உத்தரவாத காலம் குறிப்பிடப்பட்டிருக்காததுடன் மொத்தமாக கொள்வனவு செய்யும் போது சபைக்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ள கழிவுத்தொகை தொடர்பாக கவனம் செலுத்தாமல் கொள்வனவு செய்திருந்தது. | 2024 ஆண்டின் கூறுவிலை அழைப்பின் போது தேவையான விடயங்கள் உட்படுத்தப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6.1(அ) பிரிவின் படி கொள்வனவு செய்யப்பட வேண்டிய டயர்களுக்காக கூறுவிலைகள் அழைப்பதற்கு முன்னர் விவரக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 3 சந்தர்ப்பங்களில் கூட்டுப் பெறுமதி ரூபா | எதிர்காலத்தில் விவரக் குறிப்புக்களை காட்டி கூறுவிலைகள் அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

509,400 தொகைக்கான டயர்கள் மற்றும் டியுப்கள் கொள்வனவு செய்திருந்ததுடன், கூறுவிலை அழைப்புக் கடிதங்களில் விவரக் குறிப்புக்கள் என உத்தரவாத காலம் ஓடக் கூடிய கிலோமீற்றர் எண்ணிக்கை, கம்பியின் இழைகளின் எண்ணிக்கை, என்பன முக்கியமான விவரக் குறிப்பு விடயங்கள் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 3.4 ஒப்பந்த நிறுவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டிற்கான சபை நிதியத்தின் கீழ் ரூபா 1,000,000 இற்கான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு பதகிரிய செனஸிலிகம மாவத்தைக்கு சரளை கற்கள் பயன்படுத்தி அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலை அலுவல்கள் 2023 ஜுன் 27 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2023 திசெம்பர் 14 திகதி அளவிலும் பூர்த்தி செய்திருக்காததுடன், அத்திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 85,000 தொகையாக காணப்பட்டது. | இதுவரை ரூபா 298,265 இற்கான வேலைப் பகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என. | உடன்பட்டுள்ளவாறு நிர்மாண வேலை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன், கொடுப்பனவு செய்யும் போது தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மயுரபுர வாராந்த சந்தை வாகன தரிப்பிட நிர்மாண வேலை ரூபா 7,902,800 இற்காக ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்தது. உடன்பட்ட வேலைப் பகுதிகளில் அடங்கியிருந்த ரூபா 3,919,998 இற்கான வேலைப் பகுதிகள் ஒப்பந்தக்காரர்களினால் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டு இருந்த போதும், நிறைவேற்றப்பட்டிருந்த வேலைப் பகுதிக்காக ரூபா 2,785,998 தொகை செலுத்தியிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவில் இந்தத் தரைப் பிரதேசத்தில் காடுகள் வளர்ந்திருந்தமையால் செலவிடப்பட்டிருந்த ரூபா 2,785,998 இற்கான தொகை விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | தாமதக் கட்டணம் ரூபா 790,280 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன், மீதி வேலைப் பகுதியை பூர்த்தி செய்வதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டதென. | மேற்கொள்ளப்பட்ட செலவிற்கு நலன்கள் கிடைக்கக்கூடியவாறு நிர்மாண அலுவல்களை பூர்த்தி செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் முறையே 53 மற்றும் 71 ஆக காணப்பட்டதுடன், 07 பதவிகளுக்குரிய 22 மிகைகளை முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இரண்டாவது மட்டத்தில் பதவிகளின் மிகைகளை அங்கீகரித்துக்கொள்வதற்கும் ஆரம்ப மட்டத்தின் மிகை பதவிகளை சேவையின் தேவைப்பாட்டின் மீது உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்க்கப்பட்டுள்ளது என. | பதவியணியின் மிகைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் வேலை வெளிக்கள தொழிலாளர்கள் நால்வர் மற்றும் பிரதியீட்டு சுகாதார தொழிலாளர் ஒருவர் அங்கீகரிக்கப்பட்ட கடமைகளுக்கு புறம்பாக ஏனைய கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன், அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,047,005 தொகை சம்பளம் மற்றும் படிகள் என செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட கடமைகளுக்கு புறம்பாக ஏனைய கடமை அலுவல்கள் சேவைத் தேவைப்பாட்டின் மீது சாட்டப்பட்டுள்ளது என. | ஊழியர்களை அங்கீகரிக்கப்பட்ட கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும். |